# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.
## Sessions Case No.17/2021

Deposition of witness for : DW3

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **Dr. வேலுசாமி** | **Father's Name** | : |
| **Village** | : | **Taluku** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 12th day of November 2025.

(குற்ற இறுதி அறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசை படுத்தப்பட்டுள்ளனர். 1ம் எதிரி கோகுலகிருஷ்ணன் (எ) கோகுல், 2ம் எதிரி துரைப்பாண்டி (எ) பாண்டி, 4ம் எதிரி மணிகண்டன் (எ) R.S.மணி, 5ம் எதிரி ரமேஷ் (எ) காவியாரமேஷ், 6ம் எதிரி கேசவன், 7ம் எதிரி அரவிந்த், 8ம் எதிரி தமிழரசன், 9 ம் எதிரி அஜீத்குமார், 10ம் எதிரி செந்தில் (எ) செந்தில்ஈஸ்வரன், 11ம் எதிரி கலைச்செல்வன் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர். )

(1ஆம் எதிரி, 2 ஆம் எதிரி, 4 ஆம் எதிரி, 12 ஆம் எதிரி ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவில்லை. 1, 2, 4 மற்றும் 12 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். 5 முதல் 11 எதிரிகள் ஆஜர். அவர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்கள்.)

**Cr.M.P.1756/2025 என்ற மனுவில் 06.11.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 5 ஆம் எதிரி தரப்பு முதல் விசாரணை**

நான் தற்போது கரூர் ராமானுஜர் நகரில் உள்ள அமராவதி மருத்துவமனையில் சேர்மனாக உள்ளேன். தனியார் மருத்துவமனை நடத்தி வருகிறேன். மேலும் நான் கரூர் அமராவதி மருத்தவமனை, ராமானுஜர் நகர்,

கரூரில் அமராவதி நர்சிங் கல்லூரி என்ற பெயரில் நர்சிங் கல்லூரி நடத்தி வருகிறேன். 02.02.2018 அன்று அஷ்வினி (அ.சா.4) என்ற நபர் அப்பிளிகேஷன் பீஸ் ரூ.1000/- கட்டிவிட்டு பின்னால் வருவதாக சொல்லிவிட்டு சென்றார். அதன்பிறகு அவர் வந்ததாக எந்த வருகையும் பதிவேட்டிலும் இல்லை. 2018-2019 முதல் 2020-2021 ஆகிய காலகடத்தில் அஷ்வினி என்ற நபர் எங்கள் நர்சிங் கல்லூரியில் படிக்கவில்லை. வருகைப்பதிவேட்டிலும் அஷ்வினி என்ற பெயர் இல்லை. அஷ்வினி ரூ.1000/- பணம் செலுத்தியதற்கான நோட்டில் உள்ள குறிப்பை தாக்கல் செய்கிறேன். **அந்த குறிப்பின் ஜெராக்ஸ் நகல் அசல் ஆவணத்துடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. அது எ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 2020-2021 காலகட்டத்தில் வகுப்புகள் கொரானா காலம் என்பதால் ஆன்லைன் மூலமாக நடத்தப்பட்டது. நேரடி வகுப்புகள் நடைபெறவில்லை. **2020-2021 காலகட்டத்திற்குரிய வருகை பதிவேட்டில் உள்ள செப்டம்பர் மாதத்திற்குரிய பதிவுகளின் ஜெராக்ஸ் நகல் அசல் ஆவணத்துடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. அது எ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நர்சிங் கல்லூரியின் படிப்பு ஓராண்டு கால படிப்பாகும். ஆவணத்தின் படி அஷ்வினி (அ.சா.4) எங்கள் கல்லூரியில் படித்ததில்லை.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

வருகைப்பதிவேட்டினை நான் பதிவு செய்வதில்லை. எ.சா.ஆ.5 வருகைப்பதிவேட்டையும் நான் பராமரிப்பதில்லை. நர்சிங் பயிற்சி மாணவிகள் கொரான காலத்தில் பயிற்சிக்காக மருத்துவமனைக்கு வருவார்கள். எ.சா.ஆ.5-ல் பணியாளர்களின் வருகை பதிவேடு என்று தான் உள்ளது.

2018–2019 க்கு உரிய வருகைப்பதிவேடு பணியாளர் வருகை பதிவேடு தான் என்றும் அதைத்தான் நீங்கள் இன்று நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான் அதே பதிவேட்டில் தான் மாணவர்களுடைய வருகையும் பதிவு செய்யப்பட்டுள்ளது. **2018–2019 காலகட்டத்திற்கான வருகைப்பதிவேடு இது தான். அது அ.சா.ஆ.58 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2019–2020–க்கு உரிய வருகைப்பதிவேடு மணவர்கள் வருகை பதிவேடு என்று உள்ளது. அது அ.சா.ஆ.59 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2020 –2021 காலகட்டத்தில் செப்டம்பர் 2020 மாதம் வருகைப்பதிவேடு பணியாளர் வருகைப்பதிவேடு என்ற பதிவேட்டில் மாணவர் வருகை பதிவு செய்யப்பட்டுள்ளது. அது அ.சா.ஆ.60 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

<u>நீதிமன்ற கேள்வி</u>

இந்தியன் மெடிக்கல் அசோசியேசனில் உங்கள் நர்சிங் கல்லூரிக்கு ஆண்டுக்கு எத்தனை முறை ஆய்வு செய்வார்கள் என்றால் வந்து ஆய்வு செய்வதில்லை வருடத்திற்கு ஒரு முறை தேர்வு நடத்துவார்கள். இந்த பதிவேடுகள் இல்லாமல் மாணவர் வருகைப்பதிவேடு என்று தனியாக இல்லை. வேலை பார்க்கும் பணியாளர்களுக்கும் தனியாக வருகைப்பதிவேடு உள்ளது. நர்சிங் மாணவர்களுக்கு வருகைப்பதிவேட்டில் நர்சிங் பள்ளி ஆசிரியர் மாணவர்களின் வருகையை குறித்து குறியீடு செய்வார். நர்சிங் பள்ளி ஆசிரியர் மாணவர்களின் வருகைப்பதிவேட்டில் மாணவர் வருகையை ஆசிரியர் குறித்துக்கொண்டு அதில் அந்த ஆசிரியர் தினமும் சுருக்கு கையொப்பம் செய்வார்கள். எ.சா.ஆ.4–ல் ஆவணத்தில் ஆசிரியர் கையொப்பம் இல்லை. 2018–2019 காலகட்டத்திற்கான வருகைப்பதிவேடான

அ.சா.ஆ.58-ல் ஆசிரியர் சுருக்கு கையொப்பம் இல்லை. 2019-2020-க்கு உரிய வருகைப்பதிவேடு மணவர்கள் வருகை பதிவேடான அ.சா.ஆ.59 ல் ஆசிரியர் சுருக்கு கையொப்பம் உள்ளது. 2020-2021 காலகட்ட வருகைப்பதிவேட்டில் செப்டம்பர் 2020 மாதம் வருகைப்பதிவேடு என்ற பணியாளர் வருகைப்பதிவேடு என்ற பதிவேட்டில் மாணவர் வருகை பதிவு செய்யப்பட்டுள்ளது. அது அ.சா.ஆ.60-ல் ஆசிரியர் சுருக்கு கையொப்பம் இல்லை.

என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2025.11.12 17:22:19 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.